23/9/2020

# விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு - 625 234.

## முதல் அகமதிப்பீட்டு தேர்வு செப்டம்பர் - 2020

### மாணவர்களுக்கு தேர்வுக்கான நெறிமுறைகள்

1. அனைத்து துறை இளநிலை மற்றும் முதுநிலை படிப்புக்களுக்கான அகமதிப்பீட்டு தேர்வு இணையவழி மூலம் (Home Based Exam) வீட்டிலிருந்து, கல்லூரி இணையத்தில் கொடுக்கப்பட்டு உள்ள தேர்வு அட்டவணைப்படி நடைபெறும்.
2. மாணவர்கள் கல்லூரி விதிமுறைப்படி நேர்த்தியான ஆடைகளை அணிந்து தேர்வு எழுத வேண்டும்.
3. மாணவர்கள் இத்தேர்வினை Smartphone / Laptop / Tablet PC, Audio Head Set, தேவையான A4size Sheets மற்றும் Stationaries வைத்து கொண்டு எழுத வேண்டும்.
4. மாணவர்கள் தேர்வுக்கான அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள தேர்வுகளை குறித்த நேரத்திற்குள் எழுத வேண்டும்.
5. மாணவர்கள் தேர்வு தொடங்குவதற்கு 30 நிமிடம் முன்பாக (10.00 a.m.) அவரவர் துறைகளுக்கான Google தேர்வு இணைய வகுப்பறைக்குள் Login செய்து இருக்க வேண்டும்.
6. தேர்வுக்கான கேள்வித்தாள்களை மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள “Institutional E-Mail ID” வழியாக Google தேர்வு அறைகளில் தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடம் முன்பாக (10.15 a.m.) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
7. மாணவர்கள் தேர்வு எழுதுவதற்குரிய விவரங்களை பூர்த்தி செய்வதற்கான முதலாம் பக்கம் படிவத்தினை கல்லூரி இணையத்திலிருந்தோ அல்லது Google தேர்வு இணைய வகுப்பறையிலிருந்தோ பதிவிறக்கம் செய்து நகலை எடுத்து வைத்து கொள்ள வேண்டும்.
8. பதிவிறக்கம் செய்துள்ள தேர்வுக்கான முதலாம் பக்கம் படிவத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். “மாணவர் பெயர், மாணவர் வருகை எண் (Roll Number), பாடக்குறியீட்டு எண் (Course Code), பாடப்பெயர் (Course Title), தேதி, தேர்வுக்குரிய காலம் (FN / AN), தேர்வு எழுதிய மொத்த பக்கங்களின் எண்ணிக்கை, மாணவர் கையொப்பம், பெற்றோர் கையொப்பம்” மேற்க்கூறிய விவரங்களை எழுத தவறினால் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

9. மாணவர்கள் எழுதிய விடைத்தாள்கள் ஒவ்வொன்றையும் பக்க எண்கள் வாரியாக "Scan" செய்து அதை PDF File-ஆக மாற்றி அதன் பெயரை (File Name) கீழே குறிப்பிட்டுள்ள முறைப்படி கொடுக்க வேண்டும். ("Roll No_Course Code_Course Title_Date") எடுத்துக்காட்டாக: "UG20050_10AT11_discrete mathematics_28_09_2020)

10. அந்த Scan செய்த PDF File-ஐ அவரவர் Google தேர்வு இணைய வகுப்பறைக்குள் தேர்வு முடித்து 1 மணி நேரத்திற்குள் பதிவேற்றம் (Uploading) செய்ய வேண்டும் (12.30 p.m. - 1.30 p.m.)

11. மாணவர்கள் முதல் அகமதிப்பீட்டு தேர்வில் எழுதிய அனைத்து பாட விடைத்தாள்களை முறையாக Cover-ல் வைத்து கீழே குறிப்பிட்டு உள்ள தேதிகளில் அவரவர் துறை பாட பேராசிரியர்களிடமோ அல்லது துறை தலைவரிடமோ நேரில் வந்து தவறாமல் கொடுக்க வேண்டும்.

    **"12 & 13 அக்டோபர், 2020 - அனைத்து இளநிலை மற்றும் முதுநிலை முதலாமாண்டு மாணவர்கள் (9.30 a.m. - 4.00 p.m.)**

    **"14 & 15 அக்டோபர், 2020 - அனைத்து இளநிலை மற்றும் முதுநிலை இரண்டாமாண்டு மாணவர்கள் (9.30 a.m. - 4.00 p.m.)**

    **"16 & 17 அக்டோபர், 2020 - அனைத்து மூன்றாமாண்டு மாணவர்கள் (9.30 a.m. - 4.00 p.m.)**

12. அவரவர் துறை பாட பேராசிரியர்கள் முன் மாதிரி தேர்வுகளை நடத்துவார்கள்.

13. மேற்கூறிய வழிமுறைகளில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் அவரவர் பாட ஆசிரியர்களை அணுக வேண்டும்.

14. மேற்கூறிய நெறிமுறைகளை மாணவர்கள் பின்பற்றி, பெற்றோர்களின் கண்காணிப்புடன் நேர்மையுடன் எழுத வேண்டும்.

15. மாணவர்கள் தேர்வின் மாண்பினை காத்து தேர்வுகளை நடத்த ஒத்துழைக்க வேண்டும்.

A. Sathiya Bal

**அகமதிப்பீட்டு தேர்வு கட்டுப்பாட்டாளர்**

VIVEKANANDA COLLEGE ★ THIRUVEDAKAM WEST-625234 ★

T. Venkatesan 23/9/2020

**முதல்வர்**